**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No.167 /2017**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 6 |
| Name (திரு/திருமதி) | : வெங்கடாச்சலம் |
| Father's Name/ Husband's Name | : ஊத்துக்காட்டான் |
| Village & Taluk | : ஆலம்பாடிகுப்பம் |
| Calling | : மீனவர் |
| Age | : 46 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.11.2025**

1ம் எதிரி இறந்துவிட்டார். 2ம் எதிரி ஆஜர்

**முதல் விசாரணை :**

1. கடந்த 2017ம் வருடம் ஒரு நாள் நான் மேல்மலையனூர் கோவிலுக்கு வேனில் எங்கள் குடும்பத்தினருடன் வந்து கொண்ருந்தோம் மாலை சுமார் 05.00 மணியளவில் நாங்கள் மேல் மலையனூர் கோவில் இருந்தபோது நான் என் மேல் சட்டையை பார்த்தபோது அதில் வைத்திருந்த ரூ.400/- காணாமல் போயிருந்தது. அதனை யார் எடுத்தார் என்று தெரியவில்லை. மேற்படி விவரத்தை நான் கோவிலில் இருந்த காவலரிடம் கூறினேன். காவலர்கள் என்னை விசாரித்தனர்.

**(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

1. கடந்த 27.03.2017ம் தேதி நானும், எனது மனைவி சித்ரா என்பவரும் மேல் மலையனுாார் கோவிலுக்கு அக்கினி குளம் வழியாக மாலை 04.00 மணிக்கு இரு சக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தோம் என்றால் சரிதான். அப்போது TN 25 AS 2340 என்ற இரு சக்கர வாகனத்தில் இருண்டு நபர்கள் வந்து என் சட்டை பாக்கெட்டில் இருந்த ரூ.200/-யை பறித்துக்கொண்டார்கள் என்றால் இல்லை என் பாக்கெட்டில் இருந்து பணம் ரூ.400/- திருடுபோனது. பின்பு எங்களுடன் வந்த மற்றொரு நபரிடம் ரூ.200/- பறித்துக்கொண்டு ஓடினார்கள் என்றால் அது விவரம் எனக்கு தெரியாது. அப்போது அங்கிருந்த அ.சா.1 குமார் என்பவரிடம் தகவல் சொல்லி எதிரிகளை பிடித்தோம் என்றால் காவலரிடம் தகவல் சொன்னேன் அவர் விவரம் தெரியாது. நடந்த சம்பவத்தை நான் காவலர்கள்

விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரியை நான் இதற்கு முன்பு பார்த்தது கிடையாது.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–B.Vidhya,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.